# இராமநாதபுரம் மாவட்டம்

## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை

## வட்ட அலுவலகம், கடலாடி

நாள்: 07.10.2025

அறிவிக்கை எண்.: ந.க.அ2/4886/2025-02

இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலகில், கடலாடி வருவாய் வட்டத்தில் காலியாக உள்ள 06 கிராம உதவியாளர் பணியிடத்திற்கு நேரடி நியமனம் செய்வதற்காக இவ்வலுவலக அறிவிக்கை எண். ந.க.அ2/4886/2025, நாள்.08.08.2025 -ன் படி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இந்நேர்வில்,தற்போது அதிகபட்ச வயது வரம்பு தளர்வு செய்து தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

(குறிப்பு : இவ்வலவலக அறிவிக்கை எண். ந.க.அ2/4886/2025, நாள்-08.08.2025 -ன் படி ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் தற்போது விண்ணப்பிக்க தேவையில்லை.

அ) விண்ணப்பம் செய்தவற்கான கடைசி நாள் : 21.10.2025 மாலை 5.45 மணி வரை

ஆ)ஊதிய விகிதம் சிறப்பு காலமுறை ஊதியம் : ரூ.11,100 - 35,100/-

2.விண்ணப்பிக்க தகுதிகள்:

1.கல்வித் தகுதி : தமிழ்நாடு அரசுத்தேர்வுகள் இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC) Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாக கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். (குறிப்பு (SSLC) Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்

2.வயது : 01.07.2025 அன்று

| வ.எண் | பிரிவு | குறைந்தபட்ச வயது வரம்பு | அதிகபட்ச வயது வரம்பு |
|---|---|---|---|
| 1. | இதர பிரிவினர் / பொதுப்பிரிவினர் | 21 | 32 |
| 2. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் / பிற்பட்ட வகுப்பினர் / பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) | 21 | 39 |
| 3. | அட்டவணை வகுப்பினர் / அட்டவணை வகுப்பினர் (அருந்ததியினர்) / பழங்குடியினர் / ஆதரவற்ற விதவை (எந்த பிரிவினராக இருந்தாலும்) | 21 | 42 |

குறிப்பு :

i) மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகபட்ச வயது வரம்பு 10 ஆண்டுகள் கூடுதல் தளர்வு வழங்கப்படும்.

ii)முன்னாள் இராணுவ பொதுப்பிரிவினருக்கு அதிகபட்சம் 50 வயதும், இதர பிரிவினருக்கு 55 வயதும் வழங்கப்படும்.

3.பணியிடம் காலியாக உள்ள கிராமம் / வட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்

3. தேர்வு முறை:

i) மிதிவண்டி / இருசக்கர வாகனம் ஓட்டும் திறன், வாசித்தல் மற்றும் எழுதும் திறன்

ii)நேர்காணல்

4. காலிப்பணியிடங்கள் நிரப்படவுள்ள கிராமங்களின் விவரம்

| | |
|---|---|
| நிரப்பப்பட உள்ள பணியிடங்கள் எண்ணிக்கை | 6 (ஆறு மட்டும்) |

| வ. எண் | நிரப்பப்பட உள்ள கிராமத்தின் பெயர் | காலியிடத்தின் எண்ணிக்கை | இன சுழற்சி எண் | இன சுழற்சி | பொது/ பெண் | முன்னுரிமை பெற்றவர்/ முன்னுரிமை அற்றவர்** |
|---|---|---|---|---|---|---|
| 1. | சிப்பிகுளம் | 1 | 37 | MBC / DNC | பொது | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (முன்னுரிமை அற்றவர்) மாற்றுத்திறனாளி (locomotor disability) |
| 2 | அ.உ.சிலங்குளம் | 1 | 38 | BC | பொது | பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம் அல்லாதவர்கள்) (முன்னுரிமை அற்றவர்) முன்னாள் இராணுவத்தினர். PSTM |
| 3 | எஸ்.வாகைக் குளம் | 1 | 39 | GT | பெண் | பொதுப்பிரிவினர் (முன்னுரிமை அற்றவர்) |
| 4 | டி.கரிசல்குளம் | 1 | 40 | BC | பெண் | பிற்படுத்தப்பட்டோர் முஸ்லிம் ஆதரவற்ற விதவை (முன்னுரிமை அற்றவர்) |
| 5 | டி.வேப்பங்குளம் | 1 | 41 | GT | பொது | பொதுப்பிரிவினர் (முன்னுரிமை அற்றவர்) |
| 6 | குதிரைமொழி | 1 | 42 | SC | பொது | ஆதிதிராவிடர் (முன்னுரிமை அற்றவர்) |

**முன்னுரிமை பெற்றவர் எனில் அ.ஆ.எண்.122, மனிதவளமேலாண்மைத் (கே2) துறை நாள்-02.11.2021-ல் தெரிவித்துள்ள அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும்.

5. **விண்ணப்பிக்கும் முறை:**

கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை இராமநாதபுரம் மாவட்டத்தின் அதிகாரப்பூர்வ இணையதளம் https://ramanathapuram.nic.in-ல் பதிவிறக்கம் செய்து அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்களுடன் அலுவலக வேலை நாட்களில் கடலாடி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை நேரிலோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பம் செய்யலாம். நேரம் கடந்து வரும் எந்த விண்ணப்பங்களும் ஏற்கப்படமாட்டாது.

**குறிப்பு :** 1. கூடுதல் விவரங்களுக்கு https://ramanathapuram.nic.in என்ற இணையதளத்தினை பார்க்கவும்.

2.தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மிதிவண்டி / இருசக்கர வாகனம் ஓட்டும் திறன், வாசித்தல் / எழுதுதல் திறனறித் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றிற்கு தனித்தனியே கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

வருவாய் வட்டாட்சியர்,
கடலாடி வட்டம்.